# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 243/62 — 1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා — 1976.12.17

243/62 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1970 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஸ்ரீ லங்கா அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டம்**

1970 ஆம் ஆண்டின், 33 ஆம் இலக்க ஸ்ரீ லங்கா அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 28(1) பிரிவினால் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வீடமைப்பு, நிர்மாண அமைச்சர், பீற்றர் ஜெரல்ட் பர்த்தலோமியுஸ் கெனமன் ஆகிய நான், கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகக் கொள்வனவு செய்யப்பட வேண்டிய இதற்கு இணைக்கப்பட்ட அட்டவணையில், விபரித்துக் கூறப்படும் சொத்தில் இல்லாத அச்சொத்தைக் கொள்வனவு செய்தலை இத்தால் அங்கிகாரஞ் செய்கிறேன்.

பீ. ஜீ. பி. கெனமன்,
வீடமைப்பு, நிர்மாண அமைச்சர்.

1976.12.13.

**அட்டவணை**

மத்திய மாகாணம், நுவரேலியா மாவட்டத்தில் நுவரேலியா சத்தரூப்பகுதி அரசிறை உத்தியோகத்தர் பிரிவில், நுவரேலியாப் பட்டணப் பகுதிக் கிராம சேவகர் பிரிவினுள் அமைந்துள்ளதும் லோசன் வீதிக்கு எதிர்முகமாக அமைந்துள்ள மதிப்பீட்டு இல. 2, இல. 4, எலிசபெத் இராணி வழிக்கு எதிர்முகமாக அமைந்துள்ள மதிப்பீட்டு இல. 64 ஆகியவற்றைக் கொண்டதும் 'நூர்ஜஹான்ஸ்' கைத்தொழில்களும் அரைக்கும் ஆலைகளும் என்று அழைக்கப்படுவதும் அண்ணளவாக 38 பேர்ச் அளவைக் கொண்டதும், பின்வரும் எல்லைகளை உடையதுமான காணித்துண்டும் நிலமனையிடங்களும்:

எல்லைகள் :

வடக்கில் : மதிப்பீடு இல. 8, இல. 12 காணிகள் லோசன் வீதி;

கிழக்கில் : அடிப்பாதையும் நகரசபை வடிகாலும்;

தெற்கில் : எலிசபெத் இராணி வழி;

மேற்கில் : லோசன் வீதி.

12-98